பொறுப்பேற்ற 6, 7 மாதத்திற்குள் அரக்கோணம் தொகுதிக்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தந்து, அதற்குக் கட்டடம் கட்ட ரூ. 7½ கோடியும் தந்திருக்கிறார்கள். அந்தக் கல்லூரியிலே பயிலும் ஆதி திராவிட மாணவர்களுக்கு விடுதி கட்ட ரூபாய் ஒரு கோடியும் தந்ததோடு மட்டுமல்லாமல், ஆதி திராவிடர் பள்ளி மாணவியர்களுக்கு ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்தையும் தந்து, விடுதிக் கட்டடமும் தந்து, அவர்களின் கல்விக்காக அடுக்கடுக்கான திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறார்கள். அதோடு நேற்றைக்கு தீயணைப்புப் படை வீரர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட ரூபாய் 2 கோடியே 68 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்து, (மேசையைத் தட்டும் ஒலி) அரக்கோணம் தொகுதிக்கு வாரி, வாரி வழங்கி வரும் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வேலூர் மாவட்டம், அரக்கோணம் தொகுதி, அரக்கோணத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலப் பள்ளி மாணவியர் விடுதி கட்டப்படுமா என்ற வினாவைத் தொடுத்து, அதற்கான விடை அவைக்கு வருவதற்கு முன்பே, ஒரு கோடியே நாற்பத்தைந்து இலட்சம் ரூபாய் மதிப்பில் விடுதிக் கட்டடம் கட்டும் பணியை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், எனது சார்பிலும் கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 374, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

374—

ஆரம்ப சுகாதார நிலையம்

***39664—திரு. ம. முத்துராமலிங்கம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதி, டி. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், சந்தையூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், டி. கல்லுப்பட்டி ஊராட்சி ஒன்றியம், சந்தையூர் கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க அரசு ஆணை வழங்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கரங்களால் திறந்து வைக்கப்பட்டு, தற்போது மக்கள் பயன்பாட்டில் உள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 37 ஆண்டு காலப் போராட்டமாக இருந்த முல்லைப் பெரியாறை மீட்டு, 37 நாடாளுமன்ற உறுப்பினர்களை மகத்தாக வென்றெடுத்திருக்கிற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய பொற்கால ஆட்சியில், மக்களின் நாடித் துடிப்பு அறிந்து கேட்கப்படுகிற கேள்வி, அவைக்கு வருவதற்கு முன்னால் மதுரை மாவட்டம், திருமங்கலம் தொகுதிக்குட்பட்ட டி.கல்லுப்பட்டி ஒன்றியம், சந்தையூரில் புதிய ஆரம்ப சுகாதார நிலையத்தை வழங்கி, மாண்புமிகு அம்மா அவர்கள் திருக்கரங்களால் திறந்து வைத்ததற்கு, அந்தப் பகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்து, திருமங்கலம் ஒன்றியம், உரப்பனூர், வாகைக்குளம் ஆகிய கிராமங்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையம் தொடங்குவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர். சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கோரியிருக்கக்கூடிய அந்த இடத்திலே துறைரீதியாக உரிய ஆய்வுகள் நடத்தப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

(அ) மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பகுதி சாகுபடிக்கு 15–8–2014 முதல் தண்ணீர் திறந்து விடுதல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110-ன்கீழ் மூன்று அறிக்கைகளைப் பேரவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உணவினை அளித்து, நல்வளங்களை வழங்கி, விவசாயிகளின் விடிவெள்ளியாகத் திகழும் காவேரி நீர் மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்கு, நீர் இருப்பினைப் பொறுத்து, ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதத்திலோ அல்லது அதற்குப் பின்னரோ திறந்துவிடப்படும்.*

இந்த ஆண்டு ஜூன் 12 ஆம் தேதி அன்று மேட்டூர் அணையின் நீர்மட்டம் 44.40 அடியாக இருந்ததாலும், தென்மேற்கு பருவ மழை 5-6-2014 அன்று கர்நாடகா-கேரளா நீர் பிடிப்புப் பகுதிகளில் துவங்கி பின்னர் குறைவடைந்ததாலும், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து குறைவாக இருந்ததாலும், மேட்டூர் அணையிலிருந்து காவேரி டெல்டா பாசனத்திற்காக ஜூன் 12 அன்று தண்ணீர் திறந்துவிட இயலவில்லை.